## இயல் 6.1 - எண்கள்

பயிற்சி எண் :: 6.1.7.3.G

எண்கள் - பகா எண்கள் & பகு எண்
(Prime Numbers & Composite Numbers) - கண்டுபிடித்தல்


### எண்கள் - பகா எண்கள் & பகு எண் (Prime Numbers & Composite Numbers) - கண்டுபிடித்தல்

ஒரு எண் பகு எண்ணா, எனக்கண்டுபிடிப்பதற்கு ஒன்றிற்கும் அவ்வெண்ணிற்கும் இடையே இருக்கும் **வேறு ஒரு எண்ணால்** அவ்வெண் வகுபட்டால் போதுமானது. மேலும், 2-ற்கு மேல் உள்ள எல்லா இரட்டை எண்களும் பகு எண்களே ! . . . இந்த இரு தகவல்களை வைத்துகொண்டு, நாம் கீழே கொடுக்கப்பட்டுள்ள எண்கள், பகா எண்களா, அல்லது பகு எண்களா, எனக்கண்டுபிடிக்கலாம்.

---


**21**

1-ஐயும் 21-ஐயும் தவிர 3 எனும் எண் 21-ஐ வகுப்பதால் 21 எனும் எண் ஒரு **பகு** எண்ணாகும்.





**37**

1-ஐயும் 37-ஐயும் தவிர வேறு எந்த எண்ணும் 37-ஐ வகுக்காததால் 37 எனும் எண் ஒரு **பகா** எண்ணாகும்.





**42**

42 எனும் எண் 2-ல் முடிவுறுவதால் அது ஒரு இரட்டை எண். ஆதலால், நாம் வேறு ஒரு எண்ணைக்கொண்டு வகுத்துப் பார்த்து முடிவு செய்யவேண்டிய அவசியம் இல்லை. 42 எனும் எண் ஒரு **பகு** எண்ணாகும்.





**63**

1-ஐயும் 63-ஐயும் தவிர 9 எனும் எண் 63-ஐ வகுப்பதால் 63 எனும் எண் ஒரு **பகு** எண்ணாகும்.




**229**

1-ஐயும் 229-ஐயும் தவிர வேறு எந்த எண்ணும் 229-ஐ வகுக்காததால் 229 எனும் எண் ஒரு **பகா** எண்ணாகும்.




Sum & solution prepared on Wednesday 27th October, 2021 :: 07:16 Hrs.
All rights related to content above such as problem creation, solution, voice over, Video creation are reserved to
V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, CBE - 641 046, INDIA. Regd :: 4/16/2020 dt. January 31, 2020.